# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.43, சைமன்நகர் சிறுவர் விளையாட்டு மைதானத்தில் மின் விளக்குகள் மற்றும் அலங்கார கற்கள் பதித்து நடைபாதை அமைத்தல் பணிக்கு ரூ.8.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சியர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ2/4226/2018, நாள்.04.11.2019-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.P.ராஜகோபாலன் என்பவருக்கு பணி செய்திட 26.12.2019-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ2/5505/2019, நாள்.05.06.2020-ன் படி தற்போது COVID-19 தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கான MPLADS நிதி ஒதுக்கீடு இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளை நிறுத்தம் செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணியினை ரத்து செய்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.99/2019-2020

**தீர்மானம் எண்.354 – அங்கீகரிக்கப்பட்டது**

2. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.46-ல் சிதம்பரநாதன் தெருவில் டிராவலர் மாளிகை எதிர்புறம் உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் புதிதாக பாலம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.98,000/-க்கு (தொண்ணூற்றி எட்டாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4457/2020/இ1

**தீர்மானம் எண்.355 – அங்கீகரிக்கப்பட்டது**

3. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணி மேற்கொள்ளும் நிரந்தர மற்றும் ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்களான முககவசம், கையுறை, காலுறை, தலைகவசம் மற்றும் முழு கவசங்கள் அணியாமல் பணி மேற்கொண்டு வருவதாக திரு.ஆர்.சத்தியமூர்த்தி மற்றும் லூயி துாய்மை பணியாளர்கள் சங்கம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD) No.6143 மற்றும் 6342/2020 எண்ணில் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கின் மீது நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் திரு.P.ஆதிமூலபாண்டியன் – வழக்கறிஞர் ஆஜராகியும், எதிர்வாதுரை தாக்கல் செய்து, துாய்மை பணியாளர்கள் உரிய பாதுகாப்பு

உபகரணங்களுடன் பணியாற்றி வருவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது 26.06.2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி வழக்கின் மீது மாநகராட்சி சார்பில் ஆஜரான வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் வழக்கு எண்.WP(MD)No.6143/2020-க்கு ரூ.7500/-ம், வழக்கு எண்.WP(MD)No.6342/2020-க்கு ரூ.7500/- என ரூ.15,000/-ம் 29.06.2020ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார். எனவே, மேற்படி வழக்கறிஞர் கட்டணம் வழங்க அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அ. அங்கீகரிக்கலாம்

ஆ. வழக்கின் அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று வழக்கறிஞர் கட்டணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண்.3868/2020/எச்1

## தீர்மானம் எண்.356 – அங்கீகரிக்கப்பட்டது

4. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020-ன் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36, வைத்தியநாதபுரம் கோபால் தெருவில் தார்சாலை அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ3/3120/2019, நாள்.20.05.2020-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 19.06.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.சுகந்தன் | மதிப்பீட்டை விட 32.00% குறைவு |
| 2 | திரு.V.Nகண்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட 28.50% குறைவு |
| 3 | திரு.J.ரதீஸ் | மதிப்பீட்டை விட 26.50% குறைவு |
| 4 | திரு.V.டேவிட் மைக்கேல் | மதிப்பீட்டை விட 26.00% குறைவு |
| 5 | திரு.Kமணிகண்டன் | மதிப்பீட்டை விட 25.10% குறைவு |
| 6 | திரு.Rவிஜயகுமார் | மதிப்பீட்டை விட 25.04% குறைவு |
| 7 | திரு.P.இராஜகோபாலன் | மதிப்பீட்டை விட 24.75% குறைவு |
| 8 | திரு.I .பாஸ்கரன் | மதிப்பீட்டை விட 1.71% குறைவு |

அலுவலக குறிப்பு - பெறப்பட்ட எட்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 32.00% குறைவாக கொடுத்துள்ள திரு.சுகந்தன் என்பவருக்கு கூடுதல் வைப்புத்தொகை ரூ.49.305/- செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

மதிப்பீட்டு எண்.13/2020-2021

## தீர்மானம் எண்.357 – அங்கீகரிக்கப்பட்டது

5. நாகர்கோவில் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பிறப்பு / இறப்பு சான்றுகள் தயாரிக்கும் பணி பதிவில்லா சான்றுகள் தொடர்பான பதிவேடுகள் தேடும் பணி ஆகியவற்றிற்கும், நகரமைப்பு பிரிவில் தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணிகளுக்கும், பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அறிக்கைகள் அனுப்புதல், கொள்ளை நோய்கள் (Dengue, Corona) தொடர்பான அறிக்கைகள் அனுப்புதல், கணக்குப்பிரிவில் உதவியாளர் / தட்டச்சு பணி போன்றவற்றிற்கென 11 நபர்களை சுய உதவிக்குழு மூலமாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.A1/8583/2019, நாள்.10.07.2019-ன் படி தினக்கூலி அடிப்படையில் (515/-) ஏற்கனவே பணியாற்றி வருகின்றனர்.

மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடம் (8) காலியாக இருப்பதாலும், பிறப்பு / இறப்பு சான்றுகள் தயாரிக்கும் பணி தொய்வடையாமல் இருப்பதற்காகவும், தொற்று நோய்களின் தாக்கம் (Corona) அதிகமாக இருப்பதாலும், அத்தியாவசிய பணி நிமித்தம் கருதியும் மேலும் கூடுதலாக ஓராண்டிற்கு தற்காலிகமாக மேற்படி நபர்கள் பணியாற்றவும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண்.அ1/9953/2020, நாள்.14.07.2020-ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி தொகை ரூ.615/- வீதம் 07/2020 முதல் ஊதியம் வழங்கிடவும், இவர்களுக்கான ஊதியச்செலவினம் ஓராண்டிற்கு உத்தேசமாக ரூ.26.00 இலட்சம், மாநகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அங்கீகாரத்திற்கு. அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1127/2018/எச்4

**தீர்மானம் எண்.358 – அங்கீகரிக்கப்பட்டது**

6. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் "திடக்கழிவு மேலாண்மை" திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக தினமும் சேகரமாகும் 110 டன்னிற்கு அதிகமான கழிவுகளை அப்புறப்படுத்த தனியார் வாகனங்கள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான 33 வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மாநகராட்சியில் ஓட்டுநர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படாததாலும், பல பணியிடங்கள் காலியாக இருப்பதாலும் அவசர அவசியம் கருதி சுய உதவிக்குழு மூலமாக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.A/8583/2019, நாள்.10.07.2019-ன் படி தினக்கூலி அடிப்படையில் (515/-) ஏற்கனவே 32 ஓட்டுநர்கள் மற்றும் புகைப்பட கலைஞர் மற்றும் புள்ளிவிபர தொகுப்பாளர் உட்பட 33 பேர் தற்காலிக பணி அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் பணிக்காலம் ஜூலை 2020 உடன் நிறைவு பெறுவதால் அத்தியாவசிய பணி நிமித்தம் கருதியும், பொது நலன் கருதியும் மேலும் கூடுதலாக ஓராண்டிற்கு பணி செய்யும் விதமாகவும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்முறை ஆணை ந.க.எண்.அ1/9953/2020, நாள்.14.07.2020-ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி தொகை

ரூ.615/- வீதம் 07/2020 முதல் ஊதியம் வழங்கிடவும், இதற்கான செலவினத்தை (75.00 இலட்சங்கள்) மாநகராட்சி பொது நிதியில் செலவு செய்திடவும் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1127/2018/எச்4

**தீர்மானம் எண்.359 – அங்கீகரிக்கப்பட்டது**

7. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39, பட்டகசாலியன்விளையில் உள்ள அங்கன்வாடி கட்டடத்தில் ஏற்கனவே பழுதான Ac Sheet கூரையினை மாற்றி Concrete அமைத்திட ரூ.5.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள திரு.T.வீரமணி அன்னாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ளும் போது மேற்படி கட்டடமானது முற்றிலும் சேதமடைந்து உள்ளதால், அதில் மேற்கூரையினை மட்டும் மாற்றி சிமெண்ட் கூரை அமைப்பது பாதுகாப்பானதாக இல்லை என்பதாலும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பழுதான கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்தி மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே புதிய அங்கன்வாடி கட்டடம் கட்ட அனுமதிக்கும் அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த நிரக்கில் மேற்கொள்ளவும், அதற்கான திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8256/2019/இ1

**தீர்மானம் எண்.360 – அங்கீகரிக்கப்பட்டது**

8. இம்மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump house –III-ல் PH 301 மற்றும் IV –லுள்ள PH402, 403 இரண்டு எண்ணம் கொண்ட 50HP Sub motor Pump களில் உள்ள காயல்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்ய 30.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 10.25% குறைவு (ரூ.1,15,000/-) |
| 2 | திரு.Rஅமுதன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.00% குறைவு (ரூ.1,24,286.10) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 10.25% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும்

கூடுதல் வைப்பு தொகை ரூ.2,600/- செலுத்திய பின்னர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3506/2020/இ2

**தீர்மானம் எண்.361 – அங்கீகரிக்கப்பட்டது**

9. இம்மாநகராட்சிக்குட்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump house –I-ல் PH 104, PH 106லுள்ள 30HP எண்கள் கொண்ட Submotor Pump களில் உள்ள காயல்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்ய 30.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.அசோக்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 13.47% குறைவு (ரூ.56,400/-) |
| 2 | திரு.Rஅமுதன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.18% குறைவு (ரூ.63.110/-) |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 13.47% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.T.அசோக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் கூடுதல் வைப்பு தொகை ரூ.1,320/- செலுத்திய பின்னர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3507/2020/இ2

**தீர்மானம் எண்.362 – அங்கீகரிக்கப்பட்டது**

10. இம்மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தணிக்கை பிரிவிற்கு Centralized UPS Connection இல்லாததால், மின் இணைப்பு தடைபடும் நேரங்களில் கணினியில் பதிவேற்றம் செய்வது தடைபடுவதால் கணினி அறையில் இருந்து தணிக்கை பிரிவிற்கு புதியதாக Cable அமைத்து UPS Connection கொடுத்திட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் திரு.Rஅழகப்பன் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்கொண்டமைக்கு செலவுத்தொகை ரூ.3738/-ஐ மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி மேற்படி தொகையினை வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5352/2020/இ4

**தீர்மானம் எண்.363 – அங்கீகரிக்கப்பட்டது**

11. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 AL1924 பொறியர் பணியினை பார்வையிட செல்லும் போது வாகனத்தில் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பவித்ரா Auto garriage நாகர்கோவில் மூலம் பழுதுவேலைகள் சரிசெய்தமைக்கு அதற்கான தொகை ரூ.14,627/- (பதிணாங்காயிரத்து அறுநூற்றி இருபத்தி ஏழு மட்டும்) திரு.Kசுப்பையன் வாகன ஓட்டுனரால் வழங்கப்பட்டதை அன்னாருக்கு வழங்க அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1767/2012/இ2

**தீர்மானம் எண்.364 – அங்கீகரிக்கப்பட்டது**

12. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 J2839-ற்கு மின்கலப்பெட்டி பழுதடைந்துள்ளதை மாற்றி புதியதாக பொருத்துவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.5,000/-க்கு (ஐந்தாயிரம்) அனுமதியும், மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5021/2006/இ2

**தீர்மானம் எண்.365 – அங்கீகரிக்கப்பட்டது**

13. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22-ல் உள்ள ஞானம் காலனியில் உள்ள கலையரங்கம், பூங்கா, சுற்றுசுவர் மற்றும் பல்நோக்கு கட்டிடம் இவைகளில் மராமத்து பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.97,000/-க்கு (தொண்ணுாற்றி ஏழாயிரம்) அனுமதியும், பணியின் அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5159/2020/இ1

**தீர்மானம் எண்.366 – அங்கீகரிக்கப்பட்டது**

14. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தில் உள்ள வரிவசூல் மையத்தில் புதிதாக கழிவறை அமைத்தல், கவுண்டர்கள் மற்றும் கட்டிடத்தின் மீது கைப்பிடி சுவர் மற்றும் ஏணிபடிகள் அமைத்தல், மேலும் இதர மராமத்து பணிகள் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,90,000/-க்கு (ஒரு லட்சத்தி தொண்ணுாறாயிரம்) அனுமதியும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5161/2020/இ1

**தீர்மானம் எண்.367 – அங்கீகரிக்கப்பட்டது**

15. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12-ல் கருப்புக்கோட்டை பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தின் கதவுகள் Closet மற்றும் மின் இணைப்புகள் பழுதடைந்து காணப்படுவதால் அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.95,000/-க்கு (தொண்ணூற்றி ஐந்தாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5160/2020/இ1

**தீர்மானம் எண்.368 – அங்கீகரிக்கப்பட்டது**

16. இம்மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய நீர்த்தேக்கமாகியது முக்கடல் அணை பகுதிக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள அறிவியல் பூங்கா மற்றும் அணைக்கட்டினை பார்வையிட பொதுமக்கள் வருகை தருவதால் தரைமட்டத்தில் இருந்து அணைக்கு செல்லும் படிக்கட்டுகள் சேதமடைந்துள்ளதால், அதனை சரி செய்யவும், அணையின் மேல் பகுதியின் ஒரு பகுதியில் மட்டும் Hand rails அமைக்கவும், பழுதான நிலையில் உள்ள வால்வு சேம்பர் இவைகளை சரி செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,80,000/-க்கு (மூன்று லட்சத்தி எண்பதாயிரம்) அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5158/2020/இ1

**தீர்மானம் எண்.369 – அங்கீகரிக்கப்பட்டது**

17. இம்மாநகராட்சிக்குட்பட்ட முக்கிய பகுதியான SP.Office சாலையில் அமைந்துள்ள SP.அலுவலகத்தின் மேற்கு பக்கம் உள்ள கழிவு நீரோடையில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.30,000/-க்கு (முப்பதாயிரம்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 2019 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் EBK builders என்பவர் மூலம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5154/2020/இ1

**தீர்மானம் எண்.370 – அங்கீகரிக்கப்பட்டது**

18. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32-ல் பரதர் தெரு செல்லும் சாலையில் உள்ள சிறுபாலமானது பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் புதிதாக சிறுபாலம் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.78,000/-க்கு (எழுபத்தி எட்டாயிரம்) அனுமதியும், பணியின் அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.5326/2020/இ1

**தீர்மானம் எண்.371 – அங்கீகரிக்கப்பட்டது**

19. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28-ல் உள்ள டிஸ்டில்லரி சாலையில் மழைநீர் வடிகால் ஓடையில் மண் நிரம்பி உள்ளதால் JCB மற்றும் Tractor இயந்திரங்களை கொண்டு அப்புறப்படுத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,65,000/-க்கு (ஒரு லட்சத்தி அறுபத்தைந்தாயிரம்) அனுமதியும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5327/2020/இ1

**தீர்மானம் எண்.372 – அங்கீகரிக்கப்பட்டது**

20. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.40-ல் தொல்லவிளை NUHM மருத்துவமனை முன் பகுதியில் வைத்து மக்களுக்கு (Covid -19) தொற்று கண்டறிவது சம்மந்தமாக Zinc Sheet Shed அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 2,50,000/-க்கு (இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் திரு.விஜயகுமார் என்பவர் மூலம் மேற்க்கொண்டதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5151/2020/இ1

**தீர்மானம் எண்.373 – அங்கீகரிக்கப்பட்டது**

21. இம்மாநகராட்சிக்குட்பட்ட நீண்டகரை 'A' கிழக்கு கிராமம் புல எண்.319/2B2 இல் 9707 ச.மீ பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கேட்டு திருமதி.Sபொன்னம்மாள் என்பவர் நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர் அவர்களுக்கு விண்ணப்பம் அளித்துள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தின் மீது உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு மேற்கண்ட மனைப்பிரிவில் சாலைகள் பயன்பாட்டிற்கு என 2624.45 ச.மீ பரப்பளவு மனையையும் உள்ளாட்சி பொது பயன்பாட்டிற்கு என 36.00 ச.மீ மனையையும் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு பத்திரம் பதிவு செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து விபரம் தெரிவிக்க கேட்டு நாகர்கோவில் உள்ளூர்திட்டக்குழுமம், உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் கடிதம் எண்.ந.க.எண்.325/2020 நாஉதிகு, நாள்.02.07.2020ம் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே மேற்படி புல எண்.319/2B2 இன் மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டிற்கான 36.00 ச.மீ மனையையும், சாலைகளுக்கான 2624.45 ச.மீ மனையையும் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு பத்திரம் பதிவு செய்ய அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3536/2020/எப்1

**தீர்மானம் எண்.374 – அங்கீகரிக்கப்பட்டது**

22. இம்மாநகராட்சிக்குட்பட்ட அகஸ்தீஸ்வரம் வட்டம் வேம்பனூர் கிழக்கு கிராமம் புல எண்.807/1A, 2A2,6A,10B2இல் 9950.00 ச.மீ (2.458 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கேட்டு திரு.கு.கோசல்ராம் என்பவர் திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பம் அளித்ததின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்தரவு கடிதம் ந.க.எண்.694/2020/திலிம3, நாள்.19.06.2020 இன்படி மேற்கண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாநகர பொறியாளர் அவர்களின் அறிக்கையில் தெருவிளக்கு மின்கம்பம் குடிநீர் குழாய் ஆகியவற்றிற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.1,18,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் சாலையினை மனை உரிமையாளரை சொந்த செலவில் அமைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் அரசுக்கு செலுத்தப்படவேண்டிய தொகை மற்றும் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டி தொகைகள் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட புல எண்.807/1A, 2A2,6A,10B2இல் 9950.00 ச.மீ (2.458 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1130/2020/எப்1

## தீர்மானம் எண்.375 – அங்கீகரிக்கப்பட்டது

23. இம்மாநகராட்சிக்குட்பட்ட பார்வதிபுரம் சானல்கரை ரோடு நீண்டகரை 'A' கிராமம் புல எண்.G4/9-1 (pt) இன் 5400.00 ச.மீ (1.33 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான ஒப்புதல் வழங்க கேட்டு திரு.Kநாகமணி மற்றும் திரு.Kரோகின் குமார் என்பவர்கள் நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம், உறுப்பினர் செயலர்(பொ) அவர்களுக்கு விண்ணப்பம் அளித்ததை தொடர்ந்து மேற்படி உறுப்பினர் செயலர் (பொ) அவர்கள் செயல்முறை ஆணை உத்தரவு கடிதம் ந.க.எண்.1579/2019 நாஉதிகு நாள்.29.06.2020 இன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ/நா.உ.தி.கு எண்.03/2020 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 இன் பிரிவு 49 இன் கீழ் திட்ட அனுமதி எண்.04/2020 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாநகர பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தார்சாலை தரமானதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், மழைநீர் வடிகால் ஓடையானது ஒரு பகுதி PVC குழாய் வழியாகவும் மற்றொரு பகுதி சிமென்ட் தளம் மூலம் அமைக்கப்பட்டுள்ளதகாவும், மேலும் மின்கம்பங்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் செலவு தொகை ரூ.1,25,000/- (ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம்) செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனை உரிமையாளர்கள் தனாப்பத்திரம் எண்.1210/2020 நாள்.05.06.2020 இன் படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் மாநகராட்சி ஆணையாளர் பெயரில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட புல எண்.C4/9-1(pt) இல் 5400 ச.மீ (1.33 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13530/2019/எப்1

**தீர்மானம் எண்.376 – அங்கீகரிக்கப்பட்டது**

24. இம்மாநகராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம் தளவாய்தெரு புல எண்.D13/16-1(pt), 6-2,3 (pt), 6-4(pt), 6-6(pt), 6-7, 8 இல் 8789.72 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க கேட்டு யோகோவா நிசி புரமோட்டார்ஸ், மீனாட்சி கார்டன் தளவாய்தெரு மீனாட்சிபுரம் நாகர்கோவில்-1 என்ற நிறுவனம் நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம், உறுப்பினர் செயலர்(பொ) அவர்களுக்கு விண்ணப்பம் அளிக்கப்பட்டதில் உள்ளூர் திட்டக்குழுமம் உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.32/2020 நா.உ.தி.கு, நாள்.27.06.2020 இன்படி மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு ம.வ(மு) நா.உ.தி.கு எண்.3/2020 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் 1888.76 ச.மீ மற்றும் OSR 120ச.மீ பரப்பளவு அரசாணை எண்.100 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.01.07.2019 இன்படி தானப்பத்திரம் எண்.1478/2020 நாள். 23.06.2020 மூலம் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாரணயின்படி தானபப்த்திரம் உள்ளூர் திட்டக்குழுமத்தால் பின்னர் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்படும் என செயல்முறை ஆணை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளது மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4796/2020/எப்1

**தீர்மானம் எண்.377 – அங்கீகரிக்கப்பட்டது**

25. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், அது சம்பந்தமாக அறிக்கைகள் தயார் செய்திட ஏதுவாக கூடுதலாக 5 எண்ணம் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மாமன்ற கூட்ட அரங்கில் அமைத்திடவும், அதற்கு மின் வசதி பணிகள் செய்திடவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10,700/-க்கு (பத்தாயிரம் எழுநூறு மட்டும்) அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5351/2020/இ4

**தீர்மானம் எண்.378 – அங்கீகரிக்கப்பட்டது**

26. இம்மாநகராட்சியில் கணக்கராகப் பணியாற்றி 31.07.2006-ல் ஓய்வுபெற்ற திரு.Gஹென்றி பாலாசிங் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கின் W.P.No.17015/12 மீதான தீர்ப்பாணை 18.07.2019 –இல் அன்னாரின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளின் மீது 4 மாத காலத்தில் இறுதி ஆணை பிறப்பிக்க உத்தரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5310/2004/V2 நாள்.06.02.2020-ல் தெரிவித்தபடி, மேற்படி வழக்கின் தீர்ப்பாணை செயல்படுத்த கூடுதல் கால அவகாசம் கேட்க தெரிவித்து மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு திரு.சண்முகநாதன் அரசு வழக்கறிஞர் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், அரசு செயலாளருக்காகவும் ஆணையர் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கிற்காகும் வழக்கறிஞர் கட்டணத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.9295/2005/சி1

**தீர்மானம் எண்.379 – அங்கீகரிக்கப்பட்டது**

27. இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 5 HP. Mono block Blower Motor மற்றும் Air Compressed blower ஆகியவை பழுதடைந்துள்ளதனை சரிசெய்வதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.59,500/-க்கு (ஐம்பத்தி ஒன்பதாயிரத்தி ஐநூறு) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5249/2020/இ2

**தீர்மானம் எண்.380 – அங்கீகரிக்கப்பட்டது**

28. இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Pump house IV –லுள்ள Panel board 250 AMPS MCCB பழுதடைந்துள்ளதை புதிதாக மாற்றி அமைப்பதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.64,000/-க்கு (அறுபத்தி நாண்காயிரம்) அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5248/2020/இ2

**தீர்மானம் எண்.381 – அங்கீகரிக்கப்பட்டது**

29. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தேவையான ஹைப்போ குளோரின் ரூ.24,20,000/- மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.236, நாள். 28.06.2019-ன் படி அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு Sri Senthur Murugan Chem tech, Namakkal நிறுவனம் மூலம் வாங்கி பயன்படுத்தப்பட்டது. 2020-2021-ம் ஆண்டிற்கு தேவையான Hypo Chlorine வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் முதல் கொரோனா தொற்றுநோய் பரவியதனால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது அவசர தேவைக்கு மேற்படி அனுமதி உத்தரவு வழங்கப்பட்ட நிறுவனம் அதே விலை விகிதத்தில் விநியோகம் செய்திட சம்மதம் தெரிவித்ததால் மூன்று மாத தேவைக்கான Hypo Chlorine Sri Senthur Murugan Chem tech, Namakkal மூலம் வாங்கிடவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.11,72,160/-க்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.18/2019-20/இ3

**தீர்மானம் எண்.382 – அங்கீகரிக்கப்பட்டது**

30. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறுகள் அனைத்திலும் மேல்மூடி (grill) அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,12,000/-க்கு (இரண்டு லட்சத்தி பனிரெண்டாயிரம்) அனுமதியும், மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5157/2020/இ1

**தீர்மானம் எண்.383 – அங்கீகரிக்கப்பட்டது**

31. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையம் மற்றும் ஆம்னி பேருந்து நிலையங்களின் இருமருங்கிலும் Hand Rails அமைத்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13,80,000/-க்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி 12.06.2020 அன்று மின்னனு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

1. M/s. EBK Builders - மதிப்பீட்டை விட 2.50% குறைவு

ஒப்பந்தக்காரர்

ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள EBK Builders மதிப்பீட்டை விட 2.50% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

அலுவலக குறிப்பு - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.இ1/11/20-21

**தீர்மானம் எண்.384 – அங்கீகரிக்கப்பட்டது**